83

**வேலூர் மாநிலவரி கோட்ட இணை ஆணையர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை : திருமதி.இரா.சுமதி, எம்.எஸ்சி., எம்.பி.ஏ.**

**நாள்:11.03.2022**

**நக.அ2/635/2020**

பொருள்: நியமனம்(நேரடி) – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் - ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு-IV – 2015-16, 2016-17, 2017-2018 – திருமதி.கோ.திலகவதி, இளநிலை உதவியாளர் - பணியினை வரன்முறை செய்தல் - ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித எண்.1333/PSD-G1/2019, நாள்:18.02.2019.
2. இணை ஆணையர்(மாவ), வேலூர் கோட்டம், வேலூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.ஆ2/11031/2018-1, நாள்:26.02.2019.
3. தமிழ்நாடு மாநில அளவிலான கூர்நோக்கு குழு-II, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை அவர்களின் செயல்முறைகள் எண்.1657/CV-2(2)/2020-6, நாள்:04.01.2022.
4. இணை ஆணையர்(மாவ)(நுண்), வேலூர் கோட்டம் அவர்களின் கடித எண்.நக.அ2/44/2020, நாள்:04.03.2022.

---

**ஆணை:**

வேலூர் நுண்ணறிவு கோட்ட இணை ஆணையர்(மாவ) அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்துவரும் திருமதி.கோ.திலகவதி என்பவர் பார்வை-1ல் காணும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக் கடிதக்குறிப்பின்படி ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு-IV/2015-16, 2016-17, 2017-18-ஆம் ஆண்டிற்கான தேர்வில் நேரடி நியமனத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு இளநிலை உதவியாளர் தரத்தில் நியமனத்தின் பொருட்டு வேலூர் மாநிலவரி கோட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டார். பார்வை-2ல் காணும் செயல்முறைகளின்படி வேலூர்(தெற்கு) உதவி ஆணையர்(மாவ) அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டதின் பேரில் தனியாளர், 04.03.2019 முற்பகல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்தார்.

பார்வை-1ல் காணும் கடிதத்தில், திருமதி.கோ.திலகவதி என்பவரின் சாதி சான்றிதழ் (இந்து மலையாளி – பழங்குடி இனத்தவர்) "மாநில அளவிலான கூர்நோக்கு குழுவினரால்" (State Level Scrutiny Committee) ஆய்வு செய்யப்பட்டு, இறுதி அறிக்கை வரப்பெற்ற பின்னரே தனியாளரின் பணியினை வரன்முறை செய்திடல் வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து, தனியாளரின் சாதி சான்றிதழை ஆய்வு செய்து உண்மை தன்மை அறிக்கையினை அனுப்பிவைக்குமாறு தலைவர்/அரசு செயலர், மாநில அளவிலான கூர்நோக்கு குழு அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

பார்வை-3ல் காணும் செயல்முறைகளில், திருமதி.கோ.திலகவதி என்பவர் இந்து மலையாளி பழங்குடி இனத்தை சார்ந்தவர் என்று ஆரணி வருவாய் கோட்ட அலுவலர் அவர்கள் அளித்த சான்று உண்மைத்தன்மை வாய்ந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, பார்வை-1ல் காணும் கடிதத்தில் தெரிவித்துள்ள கீழ்க்கண்ட நிபந்தனையின் அடிப்படையில் தனியாளர் பணியில் சேர்ந்த நாளான 04.03.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

"The regularization is subject to the outcome of the WPs (if any) pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to Combined Civil Services Examination-IV for the year 2015-16, 2016-17 and 2017-18 recruitment".

திருமதி.கோ.திலகவதி என்பவர் பணியில் சேர்ந்த நாள் முதல் தொடர்ச்சியாக மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் பருவத்தில் இருத்தல் வேண்டும் எனவும், தகுதிகாண் பருவக்காலத்தில் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வினில் தேர்ச்சி பெறவேண்டும் மற்றும் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியினை நிறைவு செய்ய வேண்டும் என்ற நிபந்தனைகளுடனும் ஆணை வழங்கப்படுகிறது.

ஒம்/-இரா.சுமதி,
இணை ஆணையர்(மாநிலவரி),
வேலூர் கோட்டம், வேலூர்.

பெறுநர்
திருமதி.கோ.திலகவதி, இளநிலை உதவியாளர்,
இணை ஆணையர்(மாவ)(நுண்) அலுவலகம்,
வேலூர் கோட்டம், வேலூர்.
(சம்பந்தப்பட்ட தலைமை அலுவலர் மூலமாக).

நகல்: கூடுதல் தலைமை செயலர்/வணிகவரி ஆணையர், சென்னை அவர்களுக்கு தகவலின் பொருட்டு சமர்ப்பிக்கப்படுகிறது (எச்2 பிரிவு).
நகல்: இணை ஆணையர்(மாவ)(நுண்), வேலூர் கோட்டம்.
நகல்: முக்கிய ஆணை தொகுப்பு - 9(ஜே).
உபரி: 1.

/உண்மை நகல்/உத்தரவுப்படி/

11/03/2022

நேர்முக உதவியாளர்

11/3/22